# ஐயடிகள் காடவர்கோனின் ‘க்ஷேத்திர வெண்பாவில்’ வெளிப்படும் மனித அகவியல்பு நிலைகள்

ந.சுபராஜ்[1], க.கணேசராஜா[2]

**ஆய்வுச் சுருக்கம்**

பக்தியிலக்கியங்கள் படைத்த அடியார்களுள் ஐயடிகள் காடவர்கோன் தனித்துவமானவர். ஏனெனில் சிவவழிபாட்டிற்கும் தொண்டுக்கும் தன் அரச பதவி தடையாக இருக்குமெனக் கருதி அதை உதறித்தள்ளிய சிவனடியாராவார். இவரால் பாடப்பட்ட பாடல்கள் ‘ஷேத்திர வெண்பா’ எனும் பெயரில் இடம் பெறுகின்றன.சிவபெருமானின் சிறப்புக்களை இவ்விலக்கியம் விபரிக்கின்றது. இதிலே மனிதன் இறைவனின் திருப்பாதங்களை அடைதலின் அவசியத்தை ஐயடிகள் நன்கு உணர்த்தியுள்ளார். இறைவனை நாடவேண்டியதன் அவசியத்தை மனித உள்ளங்களை முன்னிலைப்படுத்திக் கூறும் இவரது திருப்பாடல்களில் வெளிப்படும் மனித அகவியல்பு நிலைகளை அடையாளங் கண்டு விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும். பக்தி இலக்கியமாக அமையும் ஷேத்திர வெண்பா மனித அகவியல்பினை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியமென்ன என்பது ஆய்வுப் பிரச்சினையாகவுள்ளது. இவ்வாய்விற்கு முதனிலைத் தரவாக ஷேத்திர வெண்பாவின் மூலமும் உரையும் பயன்படுத்தப்படுகின்றது. ஐயடிகள் காடவர் கோன் தொடர்பாகவும் அவரது இலக்கியம் தொடர்பாகவும் வெளிவந்த நூல்களும் கட்டுரைகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைகின்றன. மனிதனின் உள்ளத்தில் எழும் ஆசைகள், இயல்பூக்கங்கள் என்பன அவனது வாழ்வில் ஏற்படுத்தும் துன்பங்களை நன்கு உணர்ந்துள்ள அடிகள் அதனை முன்னெச்சரிக்கையாக வெளிப்படுத்தி மனிதனை ஆற்றுப்படுத்துவே ஷேத்திர வெண்பாவில் மனித அகவியல்புகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பதை கருதுகோளாக முன்வைத்து இவ்வாய்வு நகர்கின்றது.

**திறவுச்சொற்கள் :** ஷேத்திர வெண்பா, ஐயடிகள் காடவர்கோன், மனித நிலைப்பாடுகள், அகவியல்புகள்

## அறிமுகம்

பல்லவ மரபினைக் கொண்ட அரசராகிய ஐயடிகள் காடவர்கோன் சிவவழிபாட்டிற்கும் தொண்டுக்கும் தன் அரச பதவி தடையாக இருக்குமெனக் கருதி அதை உதறித்தள்ளிய சிவனடியாராவார். இவரால் பாடப்பட்ட பாடல்கள் ‘ஷேத்திர வெண்பா’ எனும் பெயரில் இடம் பெறுகின்றன. சிவபெருமானின் சிறப்புக்களை இவ்விலக்கியம் விபரிக்கின்றது. இதிலே மனிதன் இறைவனின் திருப்பாதங்களை அடைதலின் அவசியத்தை ஐயடிகள் நன்கு உணர்த்தியுள்ளார். இறைவனை நாடவேண்டியதன் அவசியத்தை மனித உள்ளங்களை முன்னிலைப்படுத்திக் கூறும் இவரது திருப்பாடல்களில் சிறந்த மனித அகவியல்பு சிந்தனைகளையும் அடையாளங் காணமுடிகின்றது.

## ஐயடிகள் காடவர் கோன்

பதினொராம் திருமுறையிலே இடம் பெறும் திருமுறை ஆசியர்களுள் ஐயடிகள் காடவர்கோனும் ஒருவராவார். இத் திருமுறையிலே இடம் பெறும் ஐந்தாவது பிரபந்தமாகிய ஷேத்திர வெண்பாவை பாடியவர் ஐயடிகள். திருத்தொண்டர் தொகையில் சுந்தரரால் ‘ஐயடிகள் காடவர் கோன் அடியார்க்கும் அடியேன்” சிறப்பிக்கப்பட்டுள்ளார். பெரிய புராணத்திலும் ஐயடிகள் காடவர் கோன் புராணத்திலும் இவரது வாழ்க்கை வரலாறு விரிவாக விளக்கப்

---

[1] விரிவுரையாளர், இந்துநாகரிகப்பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், Subaraj84@yahoo.com

[2] கலாநிதி, சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியல் பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பட்டுள்ளது. ஐயடிகள் காடவர் கோன் பல்லவ அரச மரபைச் சார்ந்தவர். காடவர் என்பது பல்லவ குலத்தினரைக் குறிக்கும். ஐயடிகள் என்பது ஐயனடிகள் என்பதன் மரூஉ ஆகும். ஆதலால் ஐயடிகள் காடவர் கோன் எனும் பெயர் ஐயனடிகளாகிய பல்லவ மன்னர் எனும் பொருளைத் தரும். ஐயனடிகளை நம்பியாண்டார் நம்பி,

"சத்தித் தடக்கைக் குமரன்நல் தாதைதன்
தானம் எல்லாம்
முத்திப் பதம்ஓரோர் வெண்பா மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்பைநன் தாளரற் காய்ஐயம்
ஏற்றலென்னும்
பத்திக் கடல் ஐயடிகளா கின்றநம் பல்லவனே"[1]

எனச் சிறப்பித்து மொழிகின்றார். பல்லவ மன்னனாகிய ஐயடிகளது ஆட்சிக்காலம், ஆட்சிமுறைமை பற்றி வெள்ளைவாரணர் திருமுறைகள் பற்றிய தனது ஆய்விலே விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். இவரது ஆட்சிக் காலம் கி.பி.670 இல் தொடங்கு கின்றது. ஐயடிகளின் ஆட்சி உண்மையில் சிறப்பானதாக அமைந்திருந்தது என்பதனை சேக்கிழார் தனது பெரிய புராணத்திலே,

"தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேல்
சைவமுடன்
அருமறையின் துறைவிளங்க அரசளிக்கும்
அந்நாளில்"[2]

என விளக்குகின்றார். பல்லவ மன்னர்களில் அதிகம் அறியப்படாதவராகவுள்ள ஐயடிகள் இராஜசிம்மனின் தந்தையென வெள்ளைவாரணர் நிறுவுகின்றார். அவரது பட்டப்பெயர் முதலாம் பரமேசுவர்மன் ஆகும். இவரது காலத்தில் ஒரு பெரும் போர் இடம் பெற்றுள்ளது. இப்போர் பற்றி கைலாசநாதர் ஆலயக் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாளுக்கிய மன்னனாகிய இரண்டாம் புலிகேசியின் மகன் விக்கிரமாதித்தன் தமிழ் மாநிலத்தைக் கைப் பற்றக் கருதி அம்மாநிலம் மீது படையெடுத்த போது திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள பெருவள நல்லூரில் பரமேசுவர்மன் (ஐயடிகள் காடவர்கோன்) வெற்றி கொண்டதாக அக்கல் வெட்டு உரைக்கின்றது.

பரமேசுவரவர்மன் 'கூரம்' என்ற ஊருக்குப் பரமேசுவர மங்கலம் எனப் பெயர் சூட்டி அவ்வூரில் வித்தியாவிநீத பல்லவ பரமே சுவரக்கிருகம் என்ற சிவாலயத்தை முதன் முதல் கற்றளியாகக் கட்டிய பெருமைக்குரியவர். வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவராக இருந்துள்ளார். இவ்வாறு சிறந்த ஆட்சியாளராகவும் சிவநெறியாளராகவும் விளங்கிய பரமேசுவரவர்மன் ஆட்சியை தன் புதல்வனிடம் ஒப்படைத்து விட்டு தலங்கள் தோறும் சென்று வழிபட்டு வெண்பா மாலை களால் இறைவனை அர்ச்சித்து வந்தார். அப் பணியில் நின்றே இறுதியில் இறைபதம் சேர்ந்தார்.

### ஷேத்திர வெண்பா

ஷேத்திர வெண்பா என்பது 'திருக்கோயில் வெண்பா' எனப் பொருள்படும். யாக்கை, செல்வம், இளமை ஆகியவற்றின் நிலையாமை, உறவினர்களின் செயற்பாடுகள், நோய், காமம் போன்ற பல விடயங்களை 24 வெண்பாக்களில் ஐயடிகள் காடவர்கோன் பாடியுள்ளார். ஐயடிகளால் பாடப்பட்ட திருப்பாடல்களில் 24 வெண்பாக்களே கிடைக்கப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கற்பாலது. ஐயடிகள் நாயனார் தலயாத்திரைகள் செய்யும் போது தலத்திற்கு ஒவ்வொன்று வீதம் தனது திருப் பாடல்களை வெளிப்படுத்தியிருந்தார். ஒவ்வொரு பாடலிலும் தான் சென்ற தலங் களின் பெயரினைக் குறிப்பிடாவிடினும் பெரும்பாலான பாடல்களில் தலங்களின் பெயரினைக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய வெண்பாக்களின் தொகுதியே 'ஷேத்திர வெண்பா' என வழங்கப்படுகின்றது.

சிவனையடைதலாகிய முத்திப் பேற்றுக்கு பூதப்பழிப்பு நெறியையே (உடலினை பழித்து அதன் நிலையாமையை வற்புறுத்துவது) தனது செய்யுளாக்க நெறியாகக் கொண்டருளிய ஐயடிகள் நாயனார் உடலுயிர் வாழ்விலே நேரும் அவலக் கவலைகளைப் பகிரங்கமாக உணர்த்தும் மூப்புநிலை, இழிவு, மரண வஸ்தைக் கெடுபிடி நிலமைகளை தனது ஞானப்புலமை நலஞ் சொட்டச் சொட்ட பொருத்தமான சொற்புணர்ப்பும் ஓசைநயமும் பொருளுறுதியும் நகைச்சுவை, இழிவாற்சுவை, பெருமிதச்சுவை, நலங்களுங் கனியும் நேரிசை வெண்பாக்களாற் பாடியருளினார்.[3] மெய் யுணர்வு தலைப்பட்டு சிவனைச் சாரும் ஆன்மாவானது அதற்கு முன்னோட்டமாக உண்மை நிலையில் தனக்கு வேறாயிருந்தும் தன்னோடொன்றியிருக்கும் ஒன்றெனத் தோன்றி மயக்கும் தேகாதிப்பிரபஞ்சத்தின் நிலையில்லாமையும் அதன் கெடுதலையும் உணர்ந்து அதிலிருந்து விடுபடுதல் வேண்டும் என்பதனை இவ்விலக்கியம் உணர்த்த விழைகின்றது.

**ஷேத்திர வெண்பாவில் வெளிப்படும் மனித அகவியல்புகள்**

மனிதனின் அகவியல்புகள் அவனது உளத்துடன் தொடர்புடையன. உளத்தின் இயல்பினை ஆராயுந்துறை உளவியலாகும். உளவியல் என்பது மனத்தின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்றும் பயன்பாட்டு ஒழுங்குமுறையாகும்.[4] இலக்கியங்கள் உளவியலுடன் அதிக நெருக்கமுடையவை. குறிப்பாக இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் இடையிலான உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தும் பக்தி இலக்கியங்களுக்கும் உளவியலுக்கும் அதிக தொடர்புள்ளது. பக்தி என்பது உணர்வு சார்ந்ததொரு அம்சமாகும். அது மனித மனத்துடன் நேரடித்தொடர்பு கொண்டதாகவுள்ளது. அந்த வகையில் பல்லவர்கால பக்தியிலக்கியங்களுள் ஒன்றான ஐயடிகள் காடவர்கோனின் 'ஷேத்திர வெண் பாவை' மனித அகவியற் சிந்தனைகளை வெளிப்படுத்தி நிற்குமோர் இலக்கியமாக அடையாளப்படுத்தலாம்.

விலங்குணர்ச்சிக்கும் தெய்வீக உணர்ச்சிக்கும் இடையில் மனிதனின் உள்ளம் படுகின்ற இன்னல்களை எடுத்துரைக்கின்றார் ஐயடிகள். மனிதனின் விலங்குணர்ச்சியே அவனை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. விலங்குணர்ச்சியின் பாதிப்பிலிருந்து மீளுதல் மனித உள்ளங்களுக்கு கடினமானதொரு செயலாகவே உள்ளது என்கிறார். இருப்பினும் ஐயடிகளின் எதிர்பார்ப்புக்கள் மனிதன் இந்த விலங்குணர்ச்சியிலிருந்து தெய்வீக உணர்ச்சிக்கு வர வேண்டும் என்பதாகும். இச்சிந்தனை அவரது திருப்பாடல்கள் முழுவதும் வியாபித்துள்ளன.

"எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை"[5]

"ஒகாளஞ் செய்யாமுன் நெஞ்சே உஞ்சேனை
மகாளங் கைதொழுது வாழ்த்து"[6]

"தென்னானைக் காஅடைநீ சென்று"[7]

போன்ற பாடலடிகள் இதற்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன. இங்கு மனிதனின் உள்ளத்தினை முன்னிலைப்படுத்தி 'நினை', 'வாழ்த்து', 'அடை', 'சேர்', 'தொழு' என ஆற்றுப்படுத்துகிறார் ஆசிரியர். நெறிதவறிச் செல்லும் மனிதனை நல்வழிக்குச் செல்ல உற்சாகப்படுத்துகின்றார். மனிதனின் தவறான நடத்தைகளை ஊகித்தறிந்து அதற்கான விபரங்களை அளித்து அதன் செயல்முறையை மாற்றுதல் நெறிபிறழ்வு உளவியலுக்குள் உள்ளடங்கும்.[8] இத்தகைய அணுகுமுறையை ஷேத்திர வெண்பாவில் காணமுடிகின்றது.

மனிதனின் உள்ளத்தில் விலங்குணர்ச்சி அதிகமாகவும் வெளிப்படையாகவும் இருப்பதாக உளவியலாளர்கள் சுட்டுவர். இதனை

எளிமையாகக் குறிப்பிட்டுச் செல்கின்றார். ‘உனக்குள் இருக்கும் எதிர்மறை உணர்ச்சிகளை இல்லாதொழித்து நல்வழிக்கு வா’ என அடிகள் சுட்டும் ஒவ்வொரு இடத்திலும் மனிதனின் விலங்குணர்ச்சிகளை தெளிவாக குறிப்பிட்டுச் செல்கின்றார். யாக்கையில் ஆசை கொள்ளல், செல்வம், இளமை ஆகியவற்றில் பற்றுக் கொள்ளல், காமம், உலகப்பற்றினால் ஏற்படும் பாசத்திற்கு கட்டுப்பட்டிருத்தல் என்பன மனிதனுக்குள் உருவெடுக்கும் விலங் குணர்ச்சிகளென ஐயடிகள் காடவர் கோன் அடையாளப்படுத்துகின்றார்.

மனிதனுக்குள்ள இந்த விலங்குணர்ச்சியை ‘இட்’ என சில உளவியலாளர்கள் சுட்டி யழைப்பர். குறிப்பாக சிக்மன் புரோய்டும் அவர் வழி வந்தவர்களுமே மனிதனின் விலங்குணர்ச்சியை இப்பதத்தினால் குறிக் கின்றனர். இவ்விலங்குணர்ச்சி எப்போதும் இயல்பூக்கத்தினை (Instinct) ஏற்படுத்துகின்றது. இந்த இயல்பூக்கம் இரண்டு பிரிவாக பிரிக்கப் படுகின்றது.[9]

01. வாழும் இயல்பூக்கம் (Eros)
02. மரண இயல்பூக்கம் (Thanatos)

வாழும் இயல்பூக்கம் என்பது வாழ்வதற்காக அன்றாடம் தேவையான விருப்பு வெறுப்பின் அடிப்படையில் எழும் நிலையாகும். ஒருவ ருக்குத் தேவைப்படும் சுயபாதுகாப்பு முயற்சிகள், பாலியல் உந்தல்கள் என்ற இரண்டு பகுதிகளில் இவை அடங்குகின்றன. இயல்பூக்கத்தில் உள்ள விசேட அம்சம் யாதெனில் எப்படியேனும் அடைந்து கொள்ளச் செய்யும் முயற்சியாகும். இதனை உபாய வழியிலோ அல்லது ஆக்கிரமிப்பு முறையிலோ அடைந்து கொள்வதற்கு ஒருவன் எடுக்கும் பிரயத்தனமாகும். எதிர்பார்ப்பினை அடைந்து கொள்ளும்போது அவர்கள் மகிழ்ச்சிடையும் அதேவேளை அது தோல்வியடையும் போது அதனால் துக்கமடைவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

வாழும் இயல்பூக்கத்தின் தன்மைகளை ஐயடிகள் தனது பாடல்கள் பலவற்றிலும் குறிப்பிட்டுச் செல்கின்றார். அவற்றினை மேல்வருந் தலைப்புக்களில் ஆராயலாம்.

**உறவுகளின் மீதான ஆசையும் அதன் போலித் தன்மையும்**

எங்கும் ஓடித்திரிந்து தொழிலாற்றும் தன்மை உடம்பில் குறைந்த போது, முன் நம் சொல்வழி நடந்த சுற்றத்தார்களும் மனம் மாறுபடுகின்றனர் என்கிறார் அடி கள். வாழும் போது மனிதன் எங்ஙனம் உறவு கள் மீது பற்றுக் கொண்டிருக்கின்றான் என்பதனையும் அவன் இறந்த பின்பு அந்த உறவுகளின் போலித்தன்மையையும் நன்கு அடையாளப்படுத்திக் காட்டுகின்றார். இதனை,

“ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார்.....”[10]

எனும் பாடலில் கண்டுணரலாம். இதுபோல் நம்மை மணந்த மனைவியும் நம்மிடமுள்ள செல்வமும் உயிர்போன பின்பு வீடு வரையுமே. புகழ்ச்சொல் பேசிடும் அயலாரும் உயிர் உள்ள வரைதான். நல்ல சுற்றமும் குளத்தில் நீராடி கரையேறும் வரையே என்கிறது ஷேத்திர வெண்பா.

“இல்லும் பொருளும் இருந்த னையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே”[11]

எனும் பாடலில் இதனை உணரலாம். வாழும் இயல்பூக்கத்தினால் மனிதனுக்கு ஏற்படும் உறவுகள் மீதான பற்றினைக் காட்டிய அடிகளார் அதிலுள்ள போலித்தன்மையையும் தெளிவாக எடுத்துக்காட்டி மனிதனுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார்.

**இளமை மீதுள்ள பற்றும் அதன் நிலையாமையும்**

முதுமையில் ஒரு மனிதன் பெறப்போகின்ற நிலைகளை படிநிலைப்படுத்திக் காட்டும் ஐயடிகள் அதற்கேற்ப மனிதன் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டுமென

எடுத்துரைக்க விழைகின்றார். அமர்ந்த நிலையில் கூனி, குனிந்து ஒரு கையில் கோலூன்றி நகர்ந்தும், நொந்தும், இருமியும், வருந்தியும், கோழை பெருகியும், வாய் பேசமுடியாமல் அடங்கியும் அல்லற்படுவர். இதனை,

'குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நோந்திருமி ஏங்கி நுரைத்தேறி"[12]

எனுஞ் செய்யுளில் காணலாம். இதுபோல் கைகள் ஊன்றி, கண்கள் குழிவிழிந்து, கால்கள் தடுமாற்றம் கொண்டு, ஊன்று கோலை ஊன்றி வாய் பேச முடியாமல் போவர். இதனை,

"கரம் ஊன்றி கண்இடுங்கிக் கால்குலைய மற்றோர்
முரம் ஊன்றி....."[13]

எனுஞ் செய்யுளடிகள் தெளிவுபடுத்து கின்றது. இதுபோல் காளைப்பருவம் போன்ற கட்டிளம் இளமை நீங்கி, துன்பத்தோடு கோழையும் பொருந்தி நித்தமும் அல்லல்பட்டு இடர் கொள்வர் என்கிறார். இதனை,

"காளை வடிவொழிந்து கையுறவோடு ஐயுறவாய்
நாளும் அணுகி நலியா..."[14]

எனவுரைக்கின்றார். தொடர்ந்து குயிலின் வண்ணம் போல் இருந்த தலைமுடி, கொக்கின் மேனி போல் மென்மையாய் நரைத்து, இருமல் மிகுதியாகத் தொடங்கும் என முதுமையின் இயல்பை இளைய சமூகத்திற்குக் கூறி அறிவுறுத்த முற்படுகின்றார். இதனை,

"குயிலொத்து இருள்குஞ்சி கொக்கொத்து
இருமல் பயிலப்..."[15]

எனுஞ் செய்யுள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். இளமையின் நிலையாமையை உணராமல் மனிதன் இளமைப் பருவத்தில் நிகழ்த்தும் கோரத்தனங்களுக்கு முன்னெச்சரிக்கையாக இப்பாடல்கள் அமைகின்றன.

**யாக்கை மீது கொள்ளும் பற்றும் அதன் நிலையாமையும்**

தேடிப் பெறுதற்குரிய நல்மக்கட் சட்டகமாகிய இவ்வுடம்பு சிதைவுற்று பொதுவிடமாகிய இடுகாட்டிற்குச் சென்று சுட்டழிக்கப்படுகின்றது. இத்தகைய இடுகாட்டினை 'பொடி அடுத்த பாழ்கோட்டம்'[16] என ஐயடிகள் கோன் குறிப்பிடுகின்றார். அதாவது சாம்பல் நிறைந்த இடுகாடு என அவர் அதனை சுட்டியழைக்கின்றார்.

அழுகிப் போவதும் தன்னிலையினின்று மாறுபட்டுப் போவதுமான உடலை விடுத்து உயிர் வெளியேறும் பொழுது கழுகுகள் உடலை சிதைத்து சின்னா பின்னமாக்கி உண்ணத் தொடங்கும். இதனை,

"அழகு திரிகுரம்பை ஆங்கதுவிட்டு ஆவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணா – கழுகு
கழித்துண்டு"[17]

எனுஞ் செய்யுளில்காணலாம். இதை மனதிற் கொள்ளாமல் மனம் செல்லும் திசைகளில் யாக்கையைச் செலுத்தி மனிதன் அல்லற் படுகின்றான். இத்தகைய துன்பங்களிலிருந்து விடுபட மனித இனத்திற்கு அழைப்பு விடுக்கின்றார்.

**நோயினால் மரணம் ஏற்படுகின்றது**

யாக்கை அழிவடைவதற்கு நோய்கள் முக்கிய காரணியாக இருக்கின்றது. உயிர் இருக்கும்வரை ஆடி, ஓடித்திரிந்த இந்த யாக்கை உயிர் பிரிந்த பின் தொட்டுப் பார்த்தும், நன்கு தடவிப் பார்த்தும், நன்கு நாடியைப் பிடித்துப் பார்த்தும் துடிப்பு ஒன்றும் காணாமையால் வறிய பிணம் என்று ஏளனமாகப் பெயரிட்டுப் பாடையில் கட்டி இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வர். இச்சிந்தனை கொடூர குணங் கொண்டவர்களையும் சிந்திக்க வைக்கும் கருத்தாக அமைகின்றது. இதனை,

"தொட்டுத் தடவித் துடிப் பொன்றும் காணாது
பெட்டப்பிணம் என்று பேரிட்டுக்...."[18]

எனும் பாடலடிகளில் காணலாம். இதனையே திருமூலரும்,

"குடம் உடைந்தால் அவை ஓடென்று வைப்பர்
உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே"[19]

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணமென்று பெயரிட்டு"[20]
என உரைக்கின்றார்.

**மரணம் ஏற்பட்டபின்**

உயிருடன் இருக்கும் வரை உடம்பு பெறும் புகழ், பெருமை, சிறப்புக்கள் எல்லாம் உயிர் போனபின் என்ன நிலையைப் பெறுகின்றன என்பதை சிந்திக்கத் தூண்டுகின்றார் ஐயடிகள் காடவர்கோன். இறப்பின் பின் துணியின் கரைப்பகுதியைக் கிழித்து கால்களிலுள்ள பெருவிரல்களைச் சேர்த்துக் கட்டியதோடும், இருகைகளையும் சேர்த்து ஒன்றாகக் கட்டி, மாலை அணிவித்து, கண்களுக்கு மை எழுதி புதிய பெரிய துணியால் உடலை மூடி பலர் அழுவர் என்கிறார்.

"காலைக் கலையிழையால் கட்டித்தாங்கையார்ந்து
மாலைத் தலைக்கணிந்து மை எழுதி - மேலோர்
பருக்கோடி மூடிப் பலர்அழா"[21]

இதனையே கந்தரநுபூதியில் அருணகிரி நாதரும்,

"கூகா என என்கிளை கூடி அழப்
போகா வகை மெய்ப்பொருள் பேசியவா"[22]
என உரைப்பார்.

**செல்வம் மீதான பற்றும் அதன் நிலையாமையும்**

மனிதனின் 'இட்' எனப்படும் உளத்தின் பகுதியாகிய இயல்பூக்க உணர்ச்சியில் செல்வத்தின் நிலையாமையை ஆழப் பதியவிடுவதன் ஊடாக மனிதனை நல்வழிப் படுத்துகின்றார். நூற்றுக்கணக்கில் பல்லூழிக்காலம் வெண்கொற்றக் குடையின் கீழ் அரசோம்புவதை விரும்பாதே, அப்பெருஞ் செல்வம் ஒரு நாள் வீழும் தன்மையது என்கிறார். இதனை,

"நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர
வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விழையாதே..."[23]
எனும் பாடலடிகளில் அவதானிக்கலாம்.

**அகத்தில் எழும் மரண இயல்பூக்கத்தின் தன்மைகளும் ஷேத்திர வெண்பாவும்**

மனித உள்ளத்தின் விலங்குணர்ச்சியிலே உள்ளடங்கும் மற்றுமொரு இயல்பூக்கமான மரண இயல்பூக்கத்தின் தன்மைகளையும் ஐயடிகள் தனது திருப்பாடல்களில் குறிப் பிட்டுச் செல்கிறார். மரண இயல்பூக்கம் எப்போதும் இம்சை, துன்ப நிலைமைகளை வெளிப்பாடு செய்கின்றது. வன்செயல், காமவெறி, வதைத்துக் கொள்ளல், தற்கொலை முயற்சி செய்தல் போன்ற தன்மைகள் இதனுள் இருந்து ஏற்படுகின்றது.

காமவெறி கொண்டு கட்டிய மனைவியை விடுத்து விலைமகளிரை நாடும் ஆண்களை எச்சரிக்கும் ஐயடிகளின் பாடல்கள் மரண இயல்பூக்கத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். கட்டிளங்காளை போன்ற நல்லிளமைப் பருவத்தினர் இருமல் அனைய பிணி பற்றி, கரு முடியும் வெண்மை நிறமுடைய பூளைப் போல் மாறி, பொலிவும் இழந்து, முன் தம்மொடு நன்கு பழகிய தோழியரும் (பரத்தையரும்) அருவருத்து வெறுத்தொதுக்குவர். எனவே இளமைப் பருவம் இருக்கும் வரைக்குமே இவை நிலைக்கும். இதனால் இதிலிருந்து முழுமையாக விடுபடுதல் வேண்டுமென ஆற்றுப்படுத்துகின்றார். இதனை,

"காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமயிரும்
பூளையென பொங்கிப் பொலிவிழந்து -
கூளையர்கள்
ஓகாளஞ் செய்யா....."[24]

எனும் பாடலடி வெளிப்படுத்தி நிற்கின்றது. இதுபோல் மை தீட்டப் பெற்ற கண்களைக் கொண்ட மகளிர் வெறுத்தொதுக்கும் நிலைமையைக் கருமை கொண்ட முடி வெளுத்து நரையாகி துன்பத்தால் பிதற்றறியாத

நிலை ஏற்படும் என்கிறார் ஐயடிகள்.

இதனை,

"அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலம் கோடா..."[25]

எனும் அடிகளில் காணலாம். வஞ்சிக்கொடி போன்ற மென்மையான இடை கொண்ட வாளைப் போன்ற பெரிய கண்களில் நீர் சேர்ந்திட தலைமுடி வெளுத்து கஞ்சிக் கலயத்தைத் தொடையின் மேல் வைத்து ஊட்டிட 'வா' என அழைப்பர். இதனை,

"வஞ்சியன நுண்ணிடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேல் கொண்டிருந்து – கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா"[26]

எனும் பாடலில் காணலாம்.

## நிறைவுரை

மனிதன் தன் எதிர்மறைச் சிந்தனைகளை தவிர்த்து தெய்வீக உணர்ச்சிகளை ஏற்படுத்தும் ஒழுக்கம், விழுமியம், கலாசாரம், முதிர்ந்தோர் அறிவுரைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையவனாக இருத்தல் வேண்டும் என்பதேஐயடிகள்காடவர்நாயனாரின்அறுதிச் சிந்தனையாக இருந்துள்ளது. இதனை அவரது ஷேத்திர வெண்பா பாடல்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. பிரதானமாக மூன்று விடயங்களை இவ்வாய்வினூடாக ஷேத்திர வெண்பா புலப்படுத்தி நிற்கின்றது.

1. இறைவனின் சிறப்புக்களை மாத்திரம் கூறுவதை நோக்காகக் கொண்டிருக்கவில்லை.
2. திசைமாறும் மனித உள்ளங்களுக்கு சிறந்த ஆற்றுப்படுத்தற் செய்திகளை கூறுகின்றது.
3. மனம் கலக்கமடைந்திருப்போருக்கு சிறந்த உளச்சிகிச்சை நூலாக இது அமைகின்றது.

ஆகிய பண்புகளை கொண்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது. அதாவது, ஐயடிகள் காடவர்கோன் இவ்விலக்கியத்தினூடாக மாறுபட்ட மனித உள்ளங்களை திருத்தியமைக்க முற்படுகின்றார். இதனால் தான் தனது ஒவ்வொரு பாடலிலும் மனதை விளித்துப்பாடும் வகையில் அமைத்துள்ளார். மனிதனின் உள்ளத்தில் எழும் ஆசைகள், இயல்பூக்கங்கள் என்பன அவனது வாழ்வில் ஏற்படுத்தும் துன்பங்களை நன்கு உணர்ந்துள்ள அடிகள் மனிதனுக்கு அதனை முன்னெச்சரிக்கையாக வெளிப்படுத்தி ஆற்றுப்படுத்துகின்றார். இந்த வகையில் இவரது திருப்பாடல்களில் வெளிப்படும் அகவியல்புச் சிந்தனைகள் மனிதனுக்கு சிறந்த பயனுடையனவாக அமைகின்றன.

## அடிக்குறிப்புக்கள்

1. *நடராசன், பி.ரா., (2005),* **பதினொராந் திருமுறை (மூலமும் உரையும்,** *ப.45.*
2. *ஆறுமுகநாவலர், பெரிய புராண வசனம், ப.67.*
3. *கந்தையா,மு.,* **ஐயடிகள் காடவர் கோன் புராண சூசனம்,** *ப.12.*
4. *ஜார்ஜ் எ. மில்லர், (1983),* **உளவியல் கொள்கைகள்,** *ப.13.*
5. **ஷேத்திர வெண்பா,** *பா.08.*
6. *மேலது, பா.13.*
7. *மேலது, பா.11.*
8. **டியோக்நோச்டிக் நோய்க்குறி அறிதலும் மற்றும் புள்ளிவிபரக் கைகயேடும்** (நான்காம் பதிப்பு) அமெரிக்கன் பிச்யிசியாற்றிக் மனோ நோய் தீர்வுக்கான அமைப்பு.
9. *ரிட்லி ஜயசிங்க, உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை, ப.71.*
10. **ஷேத்திர வெண்பா,** *பா.1.*

11. மேலது, பா.14.
12. மேலது, பா.3.
13. மேலது, பா.21.
14. மேலது, பா.4.
15. மேலது, பா.12.
16. மேலது, பா.2.
17. மேலது, பா.9.
18. மேலது, பா.8.
19. **திருமந்திரம்**, பா.158.
20. மேலது, பா.145.
21. **ஷேத்திர வெண்பா**, பா.6.
22. **கந்தரநுபூதி**, பா.11.
23. **ஷேத்திர வெண்பா**, பா.23.
24. மேலது, பா.13 .
25. மேலது, பா.15.
26. மேலது, பா.5.

## உசாத்துணை நூல்கள்


அருணாச்சலம்,ப., *(2002)*, **பக்தி இலக்கியம்**, முல்லை நிலையம், *184*, பிராட்வே, சென்னை.

ஆறுமுகநாவலர், **பெரிய புராண வசனம்.**

கந்தையா,மு., **ஐயடிகள் காடவர் கோன் புராண சூசனம்,**

சுப்ரமணியன்,ச.வே., *(2007)*, **பன்னிரு திருமுறை**, மாணிக்கவாசகர் பதிப்பகம்,*31* சிங்கர் தெரு, பாரிமுனை சென்னை.

நடராசன்,பி.ரா., *(2005)*, **பதினொராந் திருமுறை (மூலமும் உரையும்)**, உமா பதிப்பகம், சென்னை.

விசுவநாதன்,த, *(1998)*, **திருமுறை தேன் துளிகள்**, அருணோதயம் *03*, கௌடியாமடம் சாலை இராஜபேட்டை: சென்னை.

வெள்ளை வாரணன், க., *(1994)*, **பன்னிரு திருமுறை வரலாறு இரண்டாம் பகுதி**, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, *1994.*

ஜார்ஜ் எ. மில்லர், *(1983)*, **உளவியல் கொள்கைகள்**, ஹர்வர்ட் பல்கலைக்கழக அச்சகம், *1983.*

டியோக்நோச்டிக் நோய்க்குறி அறிதலும் மற்றும் புள்ளிவிபரக் கையேடும் (நான்காம் பதிப்பு) அமெரிக்கன் பிச்யிசியாற்றிக் மனோ நோய் தீர்வுக்கான அமைப்பு

ரிட்லி ஜயசிங்க, **உளவியல்சார் உளவளத்துணை அனுகுமுறை**, IWTh;I Trust.